நான் தன்னந்தனியா நின்று அழுதேன்
அம்மா என்னோட இல்ல
என்னை தோளில் ஏற்று தவள்கிற எம்
அப்பா என்கூட இல்ல
பாடம் படிக்கிற வயசில நான் பள்ளக்கூடம் போனதில்ல
நான் அனாதையா அலைகிறேனே யாரும் கூட இல்ல
சாமி கூட பாக்கவும் இல்ல
பூமிக்குள்ள நீதியும் இல்ல
என்னோடு சொந்தமும் இல்ல
இந் அழுக கேக்கவே இல்ல
தனிம எனக்கு உறவா இந்த தவிப்பு எனக்கு வரவா

கேட்க யாரும் இல்லையா உலகே உனக்கு மனசு இல்லையா 2

அப்பா கட்டின வீட்டில ஆமிக்காறன் வாழுறான்
நானும் இங்கு தெருவில் கிடந்து அழுவதேன் அம்மா
அம்மா எங்கட வயல் அல்லோ முள்ளுவேலி போடுறான்
நானும் இங்கு பசி கிடந்து விழுவதேன் அம்மா
உன் வெறுமை தான் எனக்குள்ளே தொல்லையே
எனக்குத்தான் எதுவுமே இல்லையே
குடு இழந்த குருவிக்குஞ்சா நான் சிலுவை சுமந்து தேவன் என்றா

நான் தன்னந்தனியா நின்று அழுதேன்
அம்மா என்னோட இல்ல
என்னை தோளில ஏற்று தவள்கிற எம்
அப்பா என்கூட இல்ல

வேறு வேறு மொழியிலே யாரோ மண்ணை ஆளுறான்
யாருக்கும் தட்டி கேக்கும் துணிவு இல்லையா
தேருளுத்த விதியில் போருடைய ராணுவம்
சாமிக்கும் எங்கள் மண்ணில் சக்தி இல்லையா
இருட்டில இருக்கின்ற சுவிச்சமா
தமிழராய் பிறந்தது குற்றமா
சொம்பல் விழ்த்தி தமிழ் வாழ்வதா
இந்த பிஞ்சு மனசு சரணாவதா

இசைத்தட்டு :
பதிப்பகம் : அகம்